**சார்பு நீதிமன்றம், அறந்தாங்கி.**

**MCOP.No.6/2019**

மனுதாரர் தரப்பு 2–வது சாட்சி மெகர்நிஷா என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி செல்வி.K.தமிழரசி, கிரேடு II பெஞ்ச் கிளார்க் என்பவரால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

**சத்தியப்பிரமாணம் செய்யப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர்.. | திருமதி.மு.மெகர்நிஷா | வயது.. | 47 |
| கணவர் பெயர்.. | முகைதீன் அப்துல்காதர் | தாலுகா | மணமேல்குடி |
| கிராமம்.. | கட்டுமாவடி | தொழில்.. | |

நாள்.. 12.**06.2026**

**PW2–ன் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :**

எனது கணவருக்கு விபத்து நடந்தது 2017 ம் வருடமா என்றால் சரிதான். மருத்துவ சிகிச்சை எது வரை செய்து வந்தார் என்றால் அவர் இறக்கும் வரை செய்து வந்தார். எந்த எந்த காலத்தில் எந்தெந்த மருத்துவமனையில் மருத்துவ சிகிச்சை எடுத்து கொண்டார் என்றால் மணமேல்குடி விஜய் மருத்துவமனை, அறந்தாங்கியில் ராதாகிருஷ்ணன் மருத்துவரிடமும், பேராவூரணியில் ஜெயபால் மருத்துவரிடமும், சென்னையில் அப்போலோ மருத்துவமனையிலும் சிகிச்சைக்கு எடுத்து கொண்டோம். இதுவரை மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக்கொண்டதற்கான மருத்துவ ரசீதுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அது என்னிடம் உள்ளது. அதை நீதிமன்றத்தில் இதுவரை தாக்கல் செய்யாததற்கு காரணம் என்னவெனில் எனக்கு தெரியவில்லை. நான் ஆதாரம் எதுவும் தாக்கல் செய்யாமல் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனது கணவர் இறந்த பிறகு உடல் கூறாய்வு செய்தீர்களா என்றால் செய்யபடவில்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒம்/–அ.உ.மாமகேஸ்வரி,
சார்பு நீதிபதி,
அறந்தாங்கி.